(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 1(10).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

2015 திசெம்பர் 12 சனிக்கிழமை வெளியிடப்பட்டது

## திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்

*

கௌரவ ரணில் விக்கிரமசிங்க

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ நிமல் சிறிபால த சில்வா

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைசார் மேற்பார்வைக் குழு,—

(அ) "மேற்பார்வை நிலையியற் குழுக்கள்" என அழைக்கப்படும் கீழே குறிப்பிடப்பட்டவாறான குழுக்கள் பாராளுமன்றத்தில் இருக்க வேண்டும் என்பதோடு, அவை ஒவ்வொன்றும் தமது நியாயாதிக்கத்தினுள் வரும் எல்லா சட்டமூலங்கள், தீர்மானங்கள், ஒப்பந்தங்கள், அறிக்கைகள் மற்றும் அதனோடிணைந்த ஏனைய விடயங்கள் தொடர்பாக பரிசீலிப்பதற்கான நியாயாதிக்கத்தையும் தொடர்புடைய பணிகளையும் கொண்டிருக்க வேண்டுமெனவும்;

(ஆ) அரசியலமைப்பின் உறுப்புரைகள் 43(1) மற்றும் 43(2) இன் கீழ் அமைச்சுக்களுக்கு குறித்தொதுக்கப்படும் விடயங்கள், பணிகள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களை பொருத்தமான துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு பின்வருமாறு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனவும்;

இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

1. பொருளாதார அபிவிருத்தி
2. சர்வதேச தொடர்புகள்
3. தேசியப் பாதுகாப்பு
4. வலுவாதார அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள்
5. பெண்கள் மற்றும் பால்நிலை
6. கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி
7. சுகாதாரம் மற்றும் மனித சேமநலம், சமூக வலுவூட்டல்
8. போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு
9. கமத்தொழில் மற்றும் காணி
10. சட்ட விவகாரம் (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை
11. இளைஞர், விளையாட்டுத்துறை, கலை மற்றும் மரபுரிமைகள்
12. வியாபாரம் மற்றும் வணிகம்
13. வலுச்சக்தி
14. உற்பத்திகளும் சேவைகளும்
15. உள்ளக நிருவாகம் மற்றும் அரச முகாமைத்துவம்
16. நல்லிணக்கம் மற்றும் வடக்கையும் கிழக்கையும் மீளக் கட்டியெழுப்புதல்

(இ) சகல சட்டமூலங்கள், தீர்மானங்கள், ஒப்பந்தங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய விடயங்களும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் அவற்றின் நியாயாதிக்கத்திற்கு உட்பட்ட சம்பந்தப்பட்ட குழுக்களுக்கு ஆற்றுப்படுத்தப்படல் வேண்டும் எனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

2. (அ) (i) (அ) பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்படும் சட்டங்களின் பிரயோகம், நிர்வாகம், நிறைவேற்றம் மற்றும் பயனுறுதி; மற்றும்

(ஆ) புதிய அல்லது மேலதிக சட்டங்களை ஆக்குவதற்கான அவசியம் அல்லது விரும்பத்தக்க தன்மையைக் குறித்துக் காட்டக்கூடிய நிலைமைகளும் சூழ்நிலைகளும்;

ஆகியவை பற்றிய அதன் பகுப்பாய்வு, கணிப்பீடு மற்றும் மதிப்பீடு; மற்றும்

(ii) சட்டங்களை வகுத்தல், பரிசீலித்தல் மற்றும் இயற்றுதல் அல்லது அவற்றுள் மாற்றங்கள் செய்தலும் தேவையான அல்லது பொருத்தமான அதுபோன்ற மேலதிக சட்டவாக்கம் போன்றவற்றில்;

பாராளுமன்றத்துக்கு ஒத்துழைப்பு வழங்கும் பொருட்டு 1. (இ) பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் குறித்த பல்வேறுபட்ட துறைசார் மேற்பார்வைக் குழுக்களுக்கு பொதுவான மேற்பார்வைப் பொறுப்புகள் இருத்தல் வேண்டும்.

(ஆ) ஒரு குழுவின் நியாயாதிக்கத்தினுள் வருகின்ற பிரச்சினைகளைக் கையாளும் சட்டங்கள், கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியன பாராளுமன்றத்தின் நோக்கத்திற்கமைய நடைமுறைப்படுத்தப்பட்டு நிறைவேற்றப் படுகின்றனவா என்பதையும் அவை தொரப்பட வேண்டுமா, கட்டுப்படுத்தப்பட வேண்டுமா அல்லது நீக்கப்பட வேண்டுமா என்பதையும் நிர்ணயிப்பதற்கு பின்வரும் விடயங்களை ஒவ்வொரு குழுவும் தொடர்ச்சியான அடிப்படையில் மீளாய்வு செய்தல் வேண்டும் -

(i) அதன் நியாயாதிக்கத்தினுள் வரும் விடயங்களை கையாளும் சட்டவாக்கக் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் பிரயோகம், நிர்வாகம், நிறைவேற்றம் மற்றும் பயனுறுதி;

(ii) அதன் நியாயாதிக்கத்தினுள் வரும் விடயங்களை கையாளும் சட்டவாக்கக் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் நிர்வாகம் மற்றும் நிறைவேற்றத்திற்கான பொறுப்புக்களைக் கொண்ட திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் ஒழுங்கமைப்பும் தொழிற்பாடும்;

(iii) அதன் நியாயாதிக்கத்தினுள் வரும் விடயங்கள் தொடர்பாக புதிய அல்லது மேலதிக சட்டவாக்கத்தின் அவசியத்தை அல்லது விரும்பத்தகுந்த தன்மையை குறித்துக்காட்டும் ஏதேனும் நிலைமைகள் அல்லது சூழ்நிலைகள் (அது தொடர்பான ஒரு சட்டமூலம் அல்லது தீர்மானம் அறிமுகப்படுத்தப்பட்டிருப்பினும் இல்லாவிடினும்); மற்றும்

(iv) அதன் நியாயாதிக்கத்தினுள் வரும் விடயங்கள் பற்றிய எதிர்கால ஆய்வுகளும் எதிர்வுகூறலும்.

(இ) ஒவ்வொரு குழுவும் தனது பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் அவசியமானது அல்லது பொருத்தமானது எனக் கருதும் அத்தகைய புலனாய்வுகளையும் ஆய்வுகளையும் எந்நேரத்திலும் நடத்தலாம்.

(ஈ) பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் தொடங்கி ஆறு வாரங்கள் பிந்தாமல், ஒவ்வொரு துறைசார் மேற்பார்வைக் குழுவும் அந்தப் பாராளுமன்றத்திற்கான அதன் மேற்பார்வைத் திட்டத்தினை வகுக்க வேண்டும். அத்தகைய திட்டம் பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு குழுவும் அதன் திட்டத்தினை உருவாக்குகையில் இயலுமானளவிற்கு -

(i) இவ்வாறான சட்டவாக்கக் கருத்திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் அல்லது முகவர்களினை மீளாய்வு செய்கையில், குழுக்களுக்கு இடையில் ஆகக்கூடுதலான ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பினை உறுதிப்படுத்து முகமாக, இதேபோன்ற அல்லது இது போன்றவற்றுடன் தொடர்புடைய சட்டவாக்கக் கருத்திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் அல்லது முகவர்கள் மீது நியாயத்துவத்தினைக் கொண்ட ஏனைய குழுக்களுடன் கலந்தாலோசித்தல், அத்துடன் அவ்வாறான ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பினை உறுதிப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகளின் விளக்கங்களை அதன் திட்டத்தில் உள்ளடக்குதல்;

(ii) மேலதிக பரிசீலனை தேவைப்படுகின்ற அல்லது தனிநபர்களுள் மீது மோசமான நிதிச்சுமைகளை சுமத்துகின்ற அரசாங்கத்தின் விதிகள், ஒழுங்குவிதிகள், நியதிச்சட்டங்கள் மற்றும் நீதிமன்றத் தீர்மானத்துடன் தொடர்புடைய குறிப்பிட்ட பிரச்சினைகளை மீளாய்வுசெய்தல்;

(iii) அவ்வாறான சட்டவாக்கக் கருத்திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள், அல்லது நிரந்தரமான வரவு-செலவுத் திட்ட அதிகார சபை அல்லது நிரந்தரமான நியதிச் சட்ட அதிகாரசபை ஆகியவற்றின் கீழ் இயங்கும் முகவர்கள் மீதான மீளாய்வினை அதன் திட்டத்தில் உள்ளடக்குவதற்கு முன்னுரிமையை வழங்குதல்; மற்றும்

(iv) அதன் நியாயாதிக்கத்தின் கீழுள்ள முக்கிய சட்டவாக்கக் கருத்திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் அல்லது முகவர்கள் காலத்திற்குக் காலம் மீளாய்வுக்கு உட்படுத்தப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

(உ) மேற்பார்வைத் திட்டங்களின் பயனுறுதி ஒருங்கமைப்பை உறுதி செய்வதற்கும் இவ்வுப வாசகத்தின் குறிக்கோள்களை அடைவதற்கும் குழுக்கள் மேற்கொள்ளக்கூடிய ஏதேனும் விதப்புரைகளுடன் அக்குழுக்கள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கும் அறிக்கைகளை சபாநாயகர் பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் தொடங்கியதிலிருந்து ஒன்பது வாரங்கள் கடப்பதற்கு முன் சமர்ப்பிக்க வேண்டும்.

3. (அ) பாராளுமன்றமானது எந்தவொரு விடயத்தினையும் எந்தவொரு துறைசார் மேற்பார்வை குழுவிற்கும் ஆற்றுப்படுத்தலாம்.

(ஆ) அமைச்சர் ஒருவர் அவருக்குக் கீழ்வரும் விடயம், செயற்பாடு, திணைக்களம் அல்லது நிறுவனத்தின் மீது நியாயாதிக்கத்தினைக் கொண்ட சம்பந்தப்பட்ட துறைசார் மேற்பார்வை குழுவிற்கு எந்தவொரு விடயத்தினையும் ஆற்றுப்படுத்தலாம்.

4. (அ) சபாநாயகர், ஒவ்வொரு சட்டமூலம், ஒழுங்குவிதி, தீர்மானம் அல்லது தொடர்புடைய ஏனையதொரு விடயம் இந்த நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, 1(அ) பந்தியின் கீழ் பெயரிடப்பட்ட துறைசார் மேற்பார்வைக் குழுவின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள விடயம் தொடர்புடைய வேறு ஏதாவது விடயத்தினையோ ஆற்றுப்படுத்தலாம்.

(ஆ) 1(அ) பந்தியின் கீழ் ஏற்பாடொன்றின் விடயப் பொருள் மீது நியாயாதிக்கத்தினைக் கொண்ட ஒவ்வொரு குழுவும் அவ்வாறான ஏற்பாட்டினைக் கருத்திற்கொண்டு பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதன் சாத்தியமான உச்சப்பட்ட அளவினை உறுதிப்படுத்தும் வகையில் பந்தி 4(அ) இன் கீழ் சபாநாயகர் விடயங்களை ஆற்றுப்படுத்தலாம்.

(இ) விடயத்தினை ஆற்றுப்படுத்தல் தொடர்பாக பந்தி (அ) மற்றும் (ஆ) இன் கீழ் செயலாற்றும் போது சபாநாயகர் :-

(I) முதன்மை நியாயாதிக்கத்திற்கான குழுவினை நியமிக்கலாம்;

(ii) ஆரம்பத்தில் அல்லது முதன்மை நியாயாதிக்கக் குழுவினால் அதன் அபிப்பிராயங்களைப் பெறுவதற்காக விடயமானது அறிக்கையிடப் பட்டதன் பின்னர் பரிசீலனைக்காக விடயத்தினை ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மேலதிகக் குழுக்களுக்கு ஆற்றுப்படுத்தலாம்;

(iii) ஆற்றுப்படுத்தலினை பொருத்தமான காலவரையறைகளுக்கு உட்படுத்தலாம்; மற்றும்

(iv) பொருத்தமானது எனக் கருதப்படக்கூடிய அவ்வாறான ஏனைய ஏற்பாடுகளை மேற்கொள்ளலாம்.

(ஈ) அபிப்பிராயத்தினை வழங்கும் குழுவின் பொறுப்பின் பரப்பின் கீழ் வரும் விடயங்களுடன் மாத்திரமே அபிப்பிராயமானது சம்பந்தப்படலாம்.

(உ) முதன்மை நியாயாதிக்கத்தைக் கொண்ட குழுவானது ஒரு காலக்கெடுவினை விதிக்கலாம். அதனுள் குழு அபிப்பிராயத்தினைக் கோரும். அத்துடன் அது முதன்மை நியாயாதிக்கக் குழுவில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டுமாயின், அக்காலக்கெடுவின் முன் அதனை வழங்க வேண்டும்.

5. (அ) நியாயாதிக்கத்தினைப் பயன்படுத்தும் ஒவ்வொரு குழுவும், குழுவினால் கவனத்தில் கொள்ளப்படும் ஒவ்வொரு விடயம் தொடர்பாகவும் ஓர் அறிக்கையினைச் சபாநாயகருக்குச் சமர்ப்பிக்கலாம். அவ்வாறான அறிக்கைகள் பாராளுமன்றத்தின் சபாபீடத்தின் முன் சமர்ப்பிக்கப்பட சபாநாயகர் ஏற்பாடு செய்வார்.

(ஆ) (i) எந்தவொரு சட்டமூலம் அல்லது ஒழுங்குவிதி மீதான குழுவின் எந்த அறிக்கையும், இணைக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளுக்கு, அவ்வாறானவை இருப்பின், வரைபுத் திருத்தங்களை, குறுகிய எண்பிப்புக்களின் படி பொருத்தமானதெனின், உள்ளடக்க வேண்டும்.

(ii) ஒரு சட்ட மூலத்திற்கான அவ்வாறான எந்தவொரு திருத்தமும், அந்தச் சட்டமூலத்தினை குழுநிலையின் போது, தவிசாளரினால் அல்லது குழுவினால் நியமிக்கப்பட்ட வேறு உறுப்பினரினால் பிரேரிக்கப்பட்ட திருத்தமாக, நிலையியற் கட்டளை 56 இன் கீழ் பாராளுமன்றத்திற்கு சபாநாயகரினால் சமர்ப்பிக்கப்படும்.

6. (அ) ஒவ்வொரு துறைசார் மேற்பார்வைக் குழுவும் அதன் கூட்டடங்கள் பற்றிய கால சூசிகையினைத் தயாரித்து அதனைச் சபாநாயகருக்குச் சமர்ப்பிக்கும்.

(ஆ) ஒவ்வொரு துறைசார் மேற்பார்வைக் குழுவும் மாதத்தில் இரண்டு நாட்களுக்குக் குறையாமல் கூடும். ஒவ்வொரு நிலையயிற் குழுவினதும் கூட்டங்கள் சபாநாயகர் அங்கீகரித்த அதன் சூசிகை / நேர அட்டவணைக்கு அமைவாக கூட்டப்படும்.

(இ) எந்தவொரு துறைசார் மேற்பார்வைக் குழுவினதும் மேலதிகக் கூட்டங்கள் ஒன்றில் தவிசாளரின் வேண்டுகோளின்படியோ அல்லது துறைசார் மேற்பார்வைக் குழுவின் உறுப்பினர்களில் அரைவாசிப் பேரின் வேண்டுகோளின்படியோ கூட்டப்படலாம்.

7. ஒவ்வொரு துறைசார் மேற்பார்வைக் குழுவும் பாராளுமன்ற பதவிக்காலம் வரை செயற்படும்.

8. (அ) பின்வருவோரைத் தவிர்ந்த சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் துறைசார் மேற்பார்வைக் குழுக்களின் உறுப்பினர்களாக பணியாற்றத் தகுதியுடையோராவார்:-

சபாநாயகர்

பிரதிச் சபாநாயகர்

குழுக்களின் பிரதித் தவிசாளர்

பிரதம அமைச்சர்

சபை முதல்வர்

எதிர்க்கட்சித் தலைவர்

அரசாங்க மற்றும் எதிர்க்கட்சியின் முதற்கோலாசான்கள்

அரசியலமைப்பின் 43(2) ஆம் உறுப்புரையின் கீழ் நியமிக்கப்பட்ட அமைச்சரவை அமைச்சர்கள்.

அரசியலமைப்பின் 44(1) இன் கீழ் நியமிக்கப்பட்ட அமைச்சரவை அமைச்சரது நியாயாதிக்கத்தின் கீழ் வராத அமைச்சுக்களின் விடயங்களையும் பணிகளையும் கொண்ட அல்லது உறுப்புரை 44(5) இன் கீழ் விடயங்களுக்கும் பணிகளுக்கும் குறித்துரைக்கப்பட்ட அமைச்சர்கள்.

(ஆ) தகுதியுடைய ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும் மூன்றுக்கு மேற்படாத துறைசார் மேற்பார்வைக் குழு உறுப்பினராக பணியாற்றுதல் வேண்டும். 8(அ) (viii) பந்தியின் கீழ் வராத பிரதி அமைச்சர்களும், அமைச்சர்களும் தாம் எந்த அமைச்சரவை அமைச்சின் கீழ் பணியாற்றுகின்றார்களோ அந்த அமைச்சின் கீழ் வரும் ஏதேனும் விடயங்கள், பணிகள், திணைக்களங்கள் அல்லது நிறுவனங்களின் அதே நியாயாதிக்கங்கள், மற்றும் பணிகளைக் கொண்ட ஏதேனும் துறைசார் மேற்பார்வைக் குழுவில் பணியாற்றுதல் ஆகாது.

(இ) தகுதிவாய்ந்த உறுப்பினர்களின் பட்டியலின் ஒவ்வொரு துறைசார் மேற்பார்வைக் குழுவினதும் உறுப்பாண்மை பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கும் அரசியல் கட்சிகளினதும் சுயேட்சைக் குழுவினதும் எண்ணிக்கைக்கு அமைய சபாநாயகர் அவர்களால் ஒதுக்கீடு செய்யப்படும்.

(ஈ) பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கும் அரசியற் கட்சிகளின் அல்லது சுயேட்சைக் குழுக்களின் தலைவர்கள் ஒவ்வொரு துறைசார் மேற்பார்வைக் குழுவிற்குமான தமது உறுப்பினர் பெயர் நியமனங்களை சபாநாயகருக்கு சமர்ப்பிக்க வேண்டும். தெரிவுக் குழுவிடம் கலந்தாலோசித்து சபாநாயகர் அத்தகைய பெயர்களை பாராளுமன்றத்தில் அறிவிக்க வேண்டும்.

(உ) பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கும் ஏதேனும் அரசியற் கட்சியின் அல்லது சுயேட்சைக் குழுவின் தலைவர் 8(ஈ) பந்தியின் கீழ் பெயர் நியமனம் செய்யப்பட்ட அத்தகைய எவரேனும் உறுப்பினரை அத்தகைய குழுவிலிருந்து அகற்றுமாறு எழுத்து மூலம் தெரிவுக்குழுவினைக் கேட்டுக்கொள்ளலாம். அத்தகைய வேண்டுகோள் கிடைக்கப்பெற்றதன் பேரில் தெரிவுக் குழு அத்தகைய உறுப்பினரை அத்தகைய குழுவிலிருந்து நீக்கிவிட்டு அதனைப் பாராளுமன்றத்திற்கு அறிவிக்க வேண்டும்.

(ஊ) ஒவ்வொரு துறைசார் மேற்பார்வைக் குழுவும் அதன் முதலாவது கூட்டத்தின் போது மற்றும் அதன் தவிசாளர் பதவி வெற்றிடமான பின்னர் நடைபெறும் முதலாவது கூட்டத்தின் போது துறைசார் மேற்பார்வைக் குழு உறுப்பினர்களுக்கிடையே அந்த மேற்பார்வைக் குழுவின் தவிசாளரைத் தெரிவு செய்தல் வேண்டும்.

(எ) குழுவினது மூன்று தொடர்ச்சியான கூட்டங்களுக்கு குழுவின் அனுமதியின்றி உறுப்பினர் எவராவது சமுகமளிக்காமலிருந்தால் அவர் அக்குழுவின் உறுப்புரிமையை இழந்தவராகக் கருதப்படுவார்.

9. துறைசார் மேற்பார்வைக் குழு ஒவ்வொன்றும் அக்குழுவினைப் பரிசீலனை செய்தல் மற்றும் அக்குழுவிற்கு அறிக்கையிடல் போன்ற விடயங்கள் அவசியமாகும் போது தனது சொந்த உறுப்பினர்களைக் கொண்டு உப குழுக்களை நியமித்தல் அத்தியாவசியமெனக் கருதுகிறது.

10. ஏதாவதொரு குறித்த விடயத்தில் அறிக்கையிடலுக்கான காலநீடிப்பு பாராளுமன்றத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தாலன்றி குறிப்புரை கொடுக்கப்பட்ட காலத்திலிருந்து 6 வாரங்கள் காலாவதியாகும் வரை துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் பாராளுமன்றத்தினால் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. பிரகடனத்தில் குறித்துரைக்கப்பட்ட கால எல்லை காலாவதியாகிய பின்பு மாத்திரமே இவ்விடயம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

11. ஏதாவது சட்டமூலம் அல்லது பொது முக்கியத்துவம் சம்பந்தப்பட்ட வேறு ஏதாவது விடயம் சார்பாக அச்சட்ட மூலத்தினால் பாதிக்கப்பட்ட சகல தரப்புகள் அல்லது அக்கறையுள்ள ஏதாவது தரப்புகள் அல்லது நபர்களிடமிருந்து சான்றுகளை துறைசார் மேற்பார்வைக் குழு ஒவ்வொன்றும் அழைக்கலாம்.

12. (அ) ஒவ்வொரு துறைசார் மேற்பார்வைக் குழுவும் ஆட்களையும் பத்திரங்களையும் பதிவுகளையும் கேட்டுப் பெறுவதற்கு அதிகாரம் உடையதாகவிருப்பதோடு, தம்முன் எடுக்கப்பட்ட சான்றுகள் பற்றிய அறிக்கைகளோடு தமது அபிப்பிராயங்கள் மற்றும் அவதானிப்புகளை உள்ளடக்கிய அறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவும் வேண்டும்.

(ஆ) துறைசார் மேற்பார்வைக் குழுவின் எவரேனும் உறுப்பினரொருவரின் மாற்றுக்கருத்துகள் குழுவின் ஏதாவது அறிக்கையுடன் இணைக்கப்படலாம்.

13. (அ) சட்டம் இயற்றுதலுக்கு துறைசார் மேற்பார்வைக் குழுவின் அறிக்கை எப்போதாவது விதப்புரை செய்யுமாயின், அத்தகைய அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு 6 வார காலப்பகுதியினுள் அமைச்சரவை தனது அபிப்பிராயங்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஆ) ஒரு துறைசார் மேற்பார்வைக் குழுவின் அறிக்கை சட்டவாக்கம் சாராத அறிக்கையாக இருக்குமிடத்து, அவ்வறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டு 6 வார காலப்பகுதியினுள் அமைச்சரவை தனது அபிப்பிராயங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

14. 8 (அ) ஆம் பந்தியானது அரசாங்க கணக்குகள் பற்றிய குழு மற்றும் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு ஆகியவற்றுக்கு ஏற்புடையனவாயிருத்தல் வேண்டும்.

*

கௌரவ ரணில் விக்கிரமசிங்க

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ நிமல் சிறிபால த சில்வா

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ தயாசிறி ஜயசேகர,— அரசாங்க நிதி பற்றிய குழு,—

குழு உறுப்பினர்களினால் தெரிவு செய்யப்பட்ட தலைவரையும் தெரிவுக் குழுவினால் பெயர் குறிப்பிடப்பட்ட 11 உறுப்பினர்களையும் கொண்ட அரசாங்க நிதி பற்றிய குழு என பெயரிடப்பட்ட குழு ஒன்று இருத்தல் வேண்டுமென இச்சபை பிரேரிக்கின்றது.

2. (அ) அரசியலமைப்பின் 148 ஆம் உறுப்புரையின் கீழ் வருமானங்களைச் சேகரிப்பதற்கும்;

(ஆ) அரசியலமைப்பின் 149 (1) ஆம் உறுப்புரையின் கீழ் திரட்டிய நிதியத்தின் மூலம் கொடுப்பனவுகளைச் செய்வதற்கும்;

(இ) அரசியலமைப்பின் 149 (1) ஆம் உறுப்புரையின் கீழ் குறித்துரைக்கப்பட்ட சட்ட ரீதியான தேவைப்பாடுகளுக்காக அரசாங்க நிதியத்தைப் பயன்படுத்துவதற்கும்

(ஈ) அரசியலமைப்பின் 150 (1) மற்றும் 150 (2) ஆம் உறுப்புரைகளின் கீழ் அரசாங்க நிதியத்தைப் பயன்படுத்துவதற்கும்;

(உ) நடப்பாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டு மந்தநிலை, ஒதுக்கீட்டு மாற்றங்கள் மற்றும் எதிர்பாரா மீதிகளுக்கும்;

(ஊ) நடப்பாண்டின் ஒதுக்கீட்டுச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும்;

(எ) அரசாங்கத்தின் கடன் மற்றும் கடன் சேவைகளும்;

(ஏ) 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்கத்தைக் கொண்ட அரசாங்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) சட்டத்தின் கீழ் அறிக்கைகளும் வெளியீடுகளும்.

பரிசீலிப்பது குழுவின் பணியாக இருத்தல் வேண்டும்.

3. குழுவினால் அவ்வப்பொழுது 2 ஆவது பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களில் எழுகின்ற விடயங்களை பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடல் வேண்டும்;

4. குழுவினால் சட்டமூலம் தொடர்பில் வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளை சபைக்குச் சமர்ப்பிப்பித்து 6 மாதத்திற்குள் அரசாங்கக் கொள்கையின் வரையறைக்குள் நிதி முறையாக செலவு செய்யப்பட்டுள்ளதாவென உள்ளடக்கிய மதிப்பீடு பற்றிய அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்து ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீட்டுக்கு பின் 4 நாட்களுக்குள் குழுவினால் மொத்த மதிப்பிடப்பட்ட செலவுகள் மற்றும் பெறுகைகளை பெற்றுக் கொண்ட அடிப்படையில் பயன்படுத்தப்பட்ட அரச நிதி, நிதி மற்றும் பொருளாதார ஊகங்கள் தொடர்பில் அறிக்கையொன்றைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) (அ) குழு மற்றும் அதன் தலைவர் சபாநாயகரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) பாராளுமன்றத்தின் நிலையியல் கட்டளை 95 இன் ஏற்பாடுகளை கவனத்தில் கொள்ளாது உறுப்பினர்களின் எண்ணிக்கை இருபத்தொன்றை (21) விஞ்சலாகாது.

(3) (அ) அதனது நடப்பெண் காணப்படுவதற்கும்;

(ஆ) ஆட்கள் ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளைக் கோருதல், பாராளுமன்றத்தின் முன் அல்லது குறித்த குழுவின் முன் தோன்றி தனது உடைமையில் அல்லது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஏதேனும் கடிதங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் அல்லது ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு எந்தவொரு ஆளுக்கும் பணிப்பு விடுப்பதற்கும்;

(இ) குழுவின் தலைவர் அல்லது உரிய நோக்கத்திற்காக குறித்துரைக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட ஆளினால் சாட்சிகாரர்களை வாய்மூலம் விசாரணை மேற்கொண்டு உண்மை நிலையை வெளிப்படுத்துவதற்கும் அல்லது வேறு விதத்தில் ஆராய்ந்து பார்ப்பதற்கும் சத்தியம் அல்லது உறுதியுரையின் மீது சாட்சியங்களை விசாரிப்பதற்கும்;

(உ) குழுவுக்கு ஒத்துழைப்பை வழங்கும் பொருட்டு உரிய துறையில் நிபுணத் துவத்தைக் கொண்ட மற்றும் தேர்ச்சி உள்ளவர்களின் சேவையைப் பெற்றுக் கொள்வதற்கும்; அத்துடன்

(உ) அவ்வப்போது இடைக்கால அறிக்கைகளைத் தயாரித்து பாராளுமன்ற ஒத்திவைப்புக்களைக் கவனத்திற் கொள்ளாது கூடுவதற்கும் குழுவுக்கு அதிகாரம் உண்டு.

(4) அதனது முதலாவது கூட்டத்தை நடாத்தும் தினம் தொடக்கம் ஒரு வருட காலத்திற்குள் அல்லது பாராளுமன்றத்தினால் வழங்கக்கூடிய வேறு மேலதிக காலப் பகுதிக்குள் குழுவினால் அதனது அறிக்கையை வழங்குதல் வேண்டும்.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.